பம். அப்படி இருந்தபோதிலும், சிறு தொழில் அதிபர்களை, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், ஒன்று சேர்த்து, ஒரு குழு அமைத்து, அவர் களே, சந்தையைத் தேடிக்கொடுப்பதில் முயற்சி எடுத்து வருகிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையோடுதான் சில சலுகைகள் கொடுப்ப தாகச் சொன்னர்கள். மத்திய அரசாங்கத்தை கேட்காமலேயே, மாநில அர சாங்கத்திடம் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மின்சார சார்ஜல், மற்ற வரிகள் எல்லாம் குறைத்து, அதன் மூலம் ஏதாவது சலுகை கொடுக்க மாநில அரசாங்கம் உடனடியாக ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பல மாதங்களுக்கு முன்பே நட வடிக்கை எடுக்கப்பட்டு, பின் தங்கிய மாவட்டங்களுக்கு என்று சில சலுகைகள் மாநில அரசு அளித்து இருக்கிறது என்று பத்திரிக்கைகளில் வந்து இருந்ததை அவர்கள் படித்து இருக்கலாம்.

THIRU M. A. LATHEEF: Sir, will the Hon. Minister be pleased to specify the number of tanneries that had been started last year under the small-scale industries. Also in view of the foreign exchange earning capacity of these industries, has the Hon. Minister got any proposal to give incentives and encourage ment to the new industries that are to be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டானரியைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

சென்னை விமான நிலையத்தில் புதுக் கட்டடங்கள்.

* 60 வினு.—திரு. பெ. மலேச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை விமான நிலையத்தில், புதிய கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதித்து உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சென்னையில் முடியும் விமான போக்குவரத்துக்கான வசதிகள் அளிக்கும் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டு வதற்கான திட்டங்கள் மத்திய அரசின் வசம் உள்ளன.

(இ) இதைத்தவிர வேறு விபரங்கள் இவ்வரசினிடம் தற்போது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இண்டர்நேஷனல் ஏர்போர்ட்ஸ் இருப்பது போல, சென்னை மீனம்பாக்கம் ஏர் போர்ட்டையும் புதுப்பிக்கத் திட்டம் இருக் கிறதா? இதுபற்றி மத்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தி நட வடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.